# ஆடகசவுந்தரி – ஒரு நோக்கு

# Adagasoundari - A Perspective

***முனைவர் முருகு தயாநிதி***
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை, தேசிய கல்வி நிறுவகம்
கொழும்பு, இலங்கை

**Dr. Murugu Thayanithy**
*Senior Lecturer, Department of Tamil*
*National Institute of Education*
*Colombo, Sri Lanka*

**Citation**: Thayanithy, M. "Adagasoundari - A Perspective." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 4, 2025, pp. 28-37.

### *ஆய்வுச் சுருக்கம்*

*மட்டக்களப்புத் தமிழக அரசியலில் ஆடகசவுந்தரி எனும் பெண் அரசி என்ற தலைப்பில் இதுவரை பெரிதும் ஆய்வுகள் வெளிவராத நிலையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த காலங்களில் ஆடகசவுந்தரி பற்றிய தகவல்கள் மட்டக்களப்பு பூர்வசரித்திரம், மட்டக்களப்பு மான்மியம் போன்ற நூல்களில் விபரக் குறிப்பாகவும் கல்வெட்டுச் செய்தியாகவும் வருகின்றன. திருமதி. கந்தையா தங்கேஸ்வரி அரசன் ஆணையும் ஆடகசவுந்தரியும் எனும் நாடகத்தினைத் தந்துள்ளார். இவ்வாறான சூழலில் இந்த ஆய்வினை மேற்கொள்வதன் ஊடாக இதுவரையும் உன்னரசுகிரியில் ஏற்படுத்தப்பட்ட அரசுகளின் தெளிவு பெறப்படுதோடு அதனை இலங்கை வரலாற்றுடனும் இயன்றவரை ஒப்பிட்டு நியாயப்படுத்தமுடிகின்றது. இந்த ஆராய்ச்சியில் ஆடகசவுந்தரி எனும் பெண்ணரசு ஆட்சி செய்துள்ளாள் என்பதன் வழி, அவளுடைய ஆட்சிக்கு முன்னருள்ள நிலையும், பின்னருள்ள வரலாற்றுத் தன்மைகளும் புலப்படுத்தப்படுகின்றன. இலங்கை வரலாற்றில் அனுராதபுர ஆட்சிக்காலம் சுமார் 1500 ஆண்டுகள் தொடர்ந்து நிலைத்திருந்தது. இதனைத் தொடர்ந்து சோழர் ஆட்சி, மாகோன் ஆட்சி, கண்டி இராச்சிய ஆட்சி என்று ஆங்கிலேயர் கண்டியினைக் கைப்பற்றும் வரை இலங்கை ஆட்சி தொடர்ந்தது. இவ்வாறான ஆட்சி இடம்பெற்ற காலங்களில் மட்டக்களப்பு நாட்டிலும் சுதந்திர அரசு நிலவியமையினை மட்டக்களப்பு பூர்வசரித்திரம், மட்டக்களப்பு மான்மியம், தெட்சணகைலாச புராணம், குளக்கோட்டன் கல்வெட்டு போன்ற ஆதாரங்கள்வழி அறியமுடிகின்றது. எனவே, இந்த ஆராய்ச்சிக் கட்டுரை, இலங்கையின் உன்னரசுகிரியினை ஆண்ட ஆடகசவுந்தரி பற்றிய தகவல்களை முன்வைப்பதோடு, அவற்றால் வெளிப்படும் வரலாற்றினைக் கண்டுகொள்வதனையே நோக்கமாகக் கொண்டுள்ளது.*

***திறவுசொல்:*** *ஆடகசவுந்தரி, மட்டக்களப்பு, பண்டையகுடிகள், கல்வெட்டு*

### Abstract

*This research is undertaken at a time when there are few extensive studies published on the topic "Adagasoundari, a Female Ruler in the Politics of Batticaloa Tamil Region." In the past, information about Adagasoundari has appeared as descriptive notes and inscriptional records in works such as "Batticaloa Poorva Charithiram" (Ancient History of Batticaloa) and "Batticaloa Manmiyam." Mrs. Kangayia Thangeswari has provided a drama titled "The King's Order and Adagasoundari." In this context, conducting this research helps clarify the various kingdoms established in Unnarasukiriya to date and allows for reasonable comparison with Sri Lankan history where possible. Through this research, the existence of a female ruler named Adagasoundari is established, along with insights into the conditions before her rule and the historical nature of the period that followed. In Sri Lankan history, the Anuradhapura period of governance lasted for approximately 1,500 years. This was followed by the Chola rule, Magon rule, and the Kandy Kingdom rule until the British captured Kandy. Sources such as "Batticaloa Poorva Charithiram,"*

*"Batticaloa Manmiyam," "Datchana Kailasa Puranam," and the Kulakkottan inscription reveal that during these periods of governance, an independent state also existed in the Batticaloa region. Therefore, this research article aims to present information about Adagasoundari, who ruled Unnarasukiriya in Sri Lanka, and to discover the history that emerges from these accounts.*

***Keywords:*** *Adagasoundari, Batticaloa, Ancient Settlements, Inscription*

**அரசியல் பின்னணி**

மனித வரலாற்றில் குமரிக்கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாட்டிலிருந்த முப்பத்தி ஒன்பது நாடுகள் கடலில் மூழ்கிப் போகவே எஞ்சி நின்றது இலங்கைத்தீவு என்பர். பலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் உலகநாடுகள் யாவும் நிலத்தொடர்புகளுடன் இருந்தன என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இவை காலப்போக்கில் கடல்கோளினாலும் கடல் அரிப்பினாலும் துண்டங்கள் ஆக்கப்பட்டமை பற்றியே அறிகின்றோம். பின்னர் குரு தேசம் முதல் கர்னாடக தேசம் வரை 56 தேசங்கள் இருந்தமை பற்றிய தகவல் கிடைக்கின்றன. (புராதன இந்தியா: 1918) இவ்வாறான ஒரு நிலத்தொடர்பில் எஞ்சிய இலங்கைத்தீவில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய தேசத்தின் தொடர்பு இருந்து வந்துள்ளமையினை. அதனை இராவண காலம் தொடக்கம் கண்டுகொள்ளமுடிகின்றது. இவ்வாறாகக் காலத்திற்குக்காலம் குடிபெயர்வு, குடியகழ்வு ஏற்பட்டது. அதற்கு இங்குள்ள மண்வளம், நிலவளம், கனிப்பொருட்கள், வாணிபத்துடன் வரலாற்றில் ஏற்பட்ட அரசியல் ஆதிக்க விளைவு, வியாபாரத்தில் மேலாண்மையினைப் பெறல் போன்ற செயற்பாடுகள் காரணமாக இருந்திருக்கின்றன. இவ்வாறாக காலத்திற்குக் காலம் ஏற்பட்ட குடிபெயர்வால், இந்திய தேசத்தில் இருந்து அரச ர்களும் அரச படையெடுப்புக்களும் இலங்கையினை நோக்கி இடம்பெற்றிருக்கின்றமையினை வரலாறுப் பின்னணியில் கண்டுகொள்கின்றோம்.

**இயக்கர், நாகர் அரசு**

இராவணனுடைய ஆட்சியைத் தொடர்ந்து, இலங்கையில் இயக்கர், நாகர்களின் ஆட்சி இடம்பெற்றமையினை மகாவம்சமும் தெளிவுபடுத்தும். மகாவம்சத்தின்படி புத்தபெருமான் போதிஞானமடைந்த ஒன்பதாவது மாதத்தில் பூச பௌணமியன்று இலங்கையில் தமது தர்மத்தைப் போதிப்பதற்காகத் தாமே அங்கிருந்து புறப்பட்டார். புறப்பட்டார். (அத்தியாயம் 1:19) அவர், மகாநாகவனத்தில் யக்ஷர்கள் வழக்கமாகக்கூடும் இடத்திற்கு வந்து, அங்கு அவர்களுக்கு இயற்கையினால் ஏற்பட்ட பயத்தைப் போக்கி, இங்கே நான் உட்கார்வதற்கு ஓர் இடம் கொடுங்கள் என்று கேட்கின்றார். யக்ஷர்கள் இறைவனே எங்கள் தீவு முழுவதையும் வேண்டுமானாலும் தருகிறோம் பயத்திலிருந்து விடுதலை அளியுங்கள் என்று கூறினார்கள். (அத்தியாயம் 1:27) பின்னர் இரண்டாம்முறை புத்தபெருமான் எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கைக்கு வருகின்றார். அப்போது இத்தீவில் நாக, னமக்களும் நாகர் ஆட்சியும் இடம்பெற்றிருக்கின்றது. புத்தபெருமான் நாகதீவில் இறங்கி மகோதரன், குலோதரனுக்கு இடையே இருந்த பிணக்கைப் போக்கி, இருவரையும் இருபிரதேசங்களுக்கு அரசாக்கினார். (ஈழத்தவர் வரலாறு: 1996) இவ்வாறாக இவர் மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்தமையினை மகாவம்சம் பதிவு செய்கின்றது. எனவே, இலங்கை வரலாற்றில் புத்தபெருமானுடைய வருகையும் பணியும் காத்திருப்பதற்கு முன்னரே இங்கு இயக்கர், நாகர் அரசுகள் இருந்தமை பற்றிய தெளிவு மகாவம் சத்தின்வழி கிடைக்கின்றது. இந்த இன மக்கள் சிவனை வணங்கியவர்கள் என்பது வரலாற்றால் தெளிவாகின்றது.

**விஜயன் வருகை**

*விஜயன் குவேனி பற்றிய கதைகள் கட்டுக்கதைகளாக இருக்கின்றமை பற்றிச் சில தமிழ் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்ற போதும், மட்டக்களப்பு பூர்வசரித்திரம், மட்டக்களப்பு மான்மியம் என்பன, கலிங்க தேசத்தில் இருந்து வந்த விஜயனும் 700 தோழர்களும் வட இலங்கையின் மணற்றிடலில் இறங்கி, நாகர் குல மக்களையும் முள்ளுத்தீவில் வந்து நாகர் குலத்துச் சிற்றரசனையும் சந்தித்து, தென்கிழக்கிலங்கையில் அமைந்த இராசதானியான காளிதேசத்தில் காளிசேனன் எனும் அரசனைக் கண்டு, குவேனியைத் திருமனம் செய்து இலங்கையினை ஆட்சி செய்கின்றான். (மட்டக்களப்பு மான்மியம் : 1998) விஜயன் (கி.மு.483 - கி.மு.445) ,ந்தியாவின் லாட நாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் முன்னர் இயக்கர், நாகர் என்பேர் சிவவழிபாடு, மரவழிபாடு, லிங்கவழிபாடுகளை மேற்கொண்டிருந்தனர். அத்தோடு, இலங்கையின் வடக்கே நகுலேச்சரமும், வடமேற்கே திருக்கேதீச்சரமும், கிழக்கே திருக்கோணேச்சரமும், மேற்கே முன்னேஸ்வரமும், தொண்டீஸ்வரமும் அமைந்திருந்தமை பற்றியும் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் இராவணன் காலத்திலிருந்து வணக்கத்தலமாக இருந்தமை பற்றியும் வரலாறு தெளிவுபடுத்துகின்றது.*

**அனுராதபுர ஆட்சிக் காலம்**

*இயக்கர், நாகர்களின் ஆட்சியினைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் காரணமாக, அனுராதபுர இராசதானி நீண்டகாலம் ஆட்சிப்பீடத்தின் தலைநகராக விளங்குகின்றது. அதாவது, கி.மு.377 தொடக்கம் கி.பி.1017ஆம் ஆண்டுவரையும் சுமார் 1500 ஆண்டுகள் இராசதானியாக ,ருந்துள்ளது. இந்த ஆட்சியில் தமிழ் மன்னர்களும் சிங்கள மன்னர்களும் இந்த அராச்சியத்தின் தலைவர்களாக இருந்துள்ளனர். தேவநம்பியதீசனுக்கு (கி.மு.250 -210) முற்பட்ட அரசர் பலர் சிவன் என்ற பெயருடன் இருந்திருக்கின்றனர். அவர்களில் கிரிகண்ட சிவன், மூத்தசிவன் (கி.மு.367 - 307), மகாசிவன் (கி.மு.257 - 247) போன்றவர்கள் தமிழர்களாகவும், பாண்டுக வாசுதேவன், அபயன், பாண்டுகாபயன், முதலிய அரசர்கள் சைவர்களாகவும் இருந்திருக்கின்றனர். அத்தோடு அனுராதபுரத்தில் வேத சிவாகமங்களில் வல்லவரான பல அந்தணர்கள் இருந்திருக்கின்றனர். பாண்டுகாபயன் அனுராதபுரத்தை நிருமாணிக்கும்பொழுது அந்தனர்களுக்கு என ஒரு பகுதியை வகுத்தான் என்றும், சிவன் கோயில் ஒன்றை நிறுவினான் என்றும் மகாவம்சம் கூறுகின்றது. கி.மு.145 - 101 வரை எல்லாளன் ஆட்சி செய்த காலத்தில் சைவம் இங்கு பரவி இருந்தது. கிறிஸ்து பிறப்பதற்கும் வரலாற்றின் ஆரம்ப காலத்திற்கும் இடைப்பட்ட காலமாகிய சுமார் 80 ஆண்டுகள் தமிழரின் ஆட்சி அனுராதபுரத்தில் காணப்பட்டமையும் துட்டுகைமுனு கி.மு.2ஆம் நூற்றாண்டில் இலங்கையில் இருந்த 32 தமிழ் சிற்றரசுகளையும் தோற்கடித்தே ஈழம் முழுவதிலும் தனது அதிகாரத்தினை நிலைநாட்டினான் என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது (ஈழத்தமிழர் தொன்மை : 2001) இவ்வாறான ஒரு அசாதாரண சூழ்நிலை இருந்தபோதும் மட்டக்களப்பு நாட்டில் சுதந்திர அரசு நிலைகொண்டது.*

**உன்னரசுகிரி**

*மட்டக்களப்பு நாட்டின் சுதந்திர அரசு ஆரம்பத்தில் பாணமையினைத் தலை நகராகக் கொண்டு இடம்பெற்றது. தொடர்ந்து உன்னரசுகிரியும் ஒரு இராச்சியமாக பிரகடனப் படுத்தப்படுகின்றது. உன்னரசுகிரியினை புன்னரசிகிரி என்றும் அழைப்பர். கி.பி.8 ஆம் நூற்றாண்டு காலத்தில் பிரசன்னசித்து தனது ஆட்சிப் பிரிவில் தென் பகுதியைப் புவனேய கஜவாகுவுக்குக் கொடுத்திருக்கின்றான். இவ்வாட்சிப் பிரிவு உகந்தைக்கும் பாணமைக்கும் இடையில் உள்ள அன்னாசிமலை என வி.சி.கந்தையாவும், சி.கணபதிப்பிள்ளை, சலவைக்களப்பிலிருந்து*

*மூன்று மைல் தூரத்தில் உள்ள குடும்பி மலையே உன்னரசுகிரி என்றும், மட்டக்களப்பு மான்மியம், குமுக்கன் ஆற்றுக்கும் மாணிக்க கங்கைக்கும் ,டைப்பட்ட பிரதேசத்தைக் எல்லையாகக் கொண்டிருக்கின்றது என்ற கருத்துக்களும் உள்ளன. உன்னரசுகிரி எல்லைகளாக வடக்கு, மக்கனல் வெட்டு வாய்க்கால், தெற்கு, மாணிக்ககங்கை, மேற்கு, மத்தங்கடவத்தன, (இன்றைய மொனறாகலை, வெல்லவாய எல்லைகளில் இவ்விடம் அமைந்திருக்கலாம்.) தெற்கு சமுத்திரமும் உள்ளடங்குகின்றன. (மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி : 1993)*

**ஆடகசவுந்தரி**

*புவநேயகஜவாகு, மனுநேயகஜவாகு ஆகிய மன்னர்களின் பின்னணியில் ஆடகசவுந்தரியின் அரசியல் வரலாறு உருவாகின்றது. பிரசன்னசித்து கி.பி.8ஆம் நூற்றாண்டில் மட்டக்களப்பினை ஆட்சி செய்யும் காலத்தில், புவநேயகஜவாகு இலங்கைக்கு வருகின்றான். அவன் இராமேஸ்வரத்தினைத் தரிசித்து இலங்கை வந்து திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பவற்றை வணங்கி, நாகர்குல மன்னனை வென்று, பிரசன்னசித்துவை மட்டக்களப்பில் சந்தித்து உறவு கொண்டாடி, அவன் கேட்டுக்கொண்டதற்கினங்க திருக்கோயிலை புனருத் தாரணம் செய்து கொடுக்கும் காலத்தில், அவனுடைய மனைவி தம்பதிநல்லாள் கற்பமாகின்றாள். இதனால் நாடு திரும்பமுடியாமல்போக, பிரசன்னசித்து உன்னரசுகிரியில் மாளிகை அமைத்துக் கொடுக்கின்றான். இவ்வாறான காலத்தில் பிறந்தவன் மனுநேயகஜவாகு. இவன் கி.பி.48ஆம் ஆண்டு பட்டம் சூடுகின்றான். கால நீட்சியில் கடலில் பேழை ஒன்று அடைந்து வருவதனை அரசனுக்கு (மனுநேயகஜவாகு) அறிவிக்கின்றனர். அரசனும் தனது பிரதானிகளுடன் சென்று பேழையினைத் திறந்தபோது ஒருபெண் குழந்தை ஒன்று சிரித்த முகத்துடன் இருந்தது. அதனை அன்போடு அனைத்துக் கொண்ட அவன் ஆடகம், சவுந்தரி என்ற ,ரண்டு பெயர்களை சூட்டுகின்றான். இந்தக் குழந்தை கடலில் அடைந்து வந்து கரைசேர்ந்த இடம் திருக்கோயிலுக்குத் தெற்கே உள்ளது. மகுநேயகஜவாகு அந்த இடத்திற்குப் பாலர்நகை நாடு என நாமம்சூட்டி அதனை நகராக்கி, தாசகனிடத்தில் ஒப்புக்கொடுக்கின்றான். ஆடகசவுந்தரியின் பிறப்பு முற்பிறப்பினை உணர்த்தி நிற்கின்றது. இராமாயணக் கதையுடன் ,வளுடைய வரலாறு தொடர்புபடுகின்றது. 120 வருடம் ஆயுள் உடைய இவள், கி.பி 78ஆம் ஆண்டு உன்னரசுகிரிக்கு அரசியாக வருகின்றாள். ஆடகசவுந்தரி உன்னரசுகிரிக்கு ஆட்சிக்கு வந்ததும், ஆறு மந்திரிகளை வகுத்து நாற்பது வருஷம் ஆட்சி செய்கின்றாள். ,வளுடைய ஆட்சிக்காலத்தில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. (மட்டக்களப்பு பூர்வசரித்திரம்: 2005) ஆடகசவுந்தரியினை முன்முடி ஆடகசவுந்தரி என்றும், முன்முலை ஆடகசவுந்தரி என்றும் சிறப்பாக அழைக்கலாயினர். முடிபோன்ற வடிவமுள்ள மறுவோடு பிறந்ததால், இவள் இராணி ஆவதற்கு முன்னரே முடிசூடி வந்தவள் என்றும், தான் பெரிய பெண் ஆவதற்கு முன்பே, முலை வடிவமான அந்த மறுவோடு பிறந்ததை குறித்து அவளை முன்முலை ஆடகசவுந்தரி என்றும் அழைக்கலாயினர். இந்த மறு மாமங்கை நதியில் தீர்த்தம் ஆடவே மறு அழிந்து போனதாம்.*

*ஆடகசவுந்தரி இந்தியாவில் கலிங்க நாட்டின் வடக்கே உள்ள அசோககிரி எனும் பதியினைச் சேர்ந்தவள். இது அசோகசுந்தர மன்னனின் தலைநகராகும். இம்மன்னன் மனோன்மணிசுந்தர தேவியைத் திருமணம் செய்திருந்தார். இவர்களுக்குப் பிறந்த பெண்குழந்தைதான் ஆடகசவுந்தரி. இவள் பிறக்கும்போது முடிந்த கூந்தலும் பேரழகு உடையவளாகவும் இருந்தாள். அவளது கழுத்தின் அடியில் அமங்கலமான பெரிய மறுவொன்று இருந்தது. இந்த மறுவால் நாட்டுக்குக்கேடு என்றும், உமது இராச்சியத்தை பகைவர் கைப்பற்றுவர்கள் என்று சோதிடர் கூறியதும், அக்குழந்தையினை மன்னர் பெட்டியில்வைத்துக் கடலில் அனுப்பிவிட்டார் என்ற தகவல் மட்டக்களப்பு பூர்வசரித்திரம் மற்றும் மட்டக்களப்பு மான்மியத்தில் உண்டு.*

**இராமர் கனவில் வருதல் - 1**

*ஆடகசவுந்தரிக்கு ஏழு வயதாகின்ற காலத்தில் ஒருவர் தரிசனப் பிரசன்னராகி, இராம மந்திரம் ஒன்றும், இராமதி யானமே வணங்குமென்றும் உபதேசித்தகன்றார். உடன் கண்விழித்தெழுந்த ஆடகசவுந்தரி மறுநாள் காலையில் இராம மூர்த்தியை வணங்கி அவ்வணக்கமுறையினைத் தொடர்கின்றாள். (மட்டக்களப்பு பூர்வசரித்திரம் : 2005)*

**பூதப்படை**

*இவளுடைய ஆட்சி தொடரும் காலத்தில், உன்னரசுகிரியில் உள்ள குறுநில எயின் ஒருவர் அம்மணி, ஒரு கற்குகையில் யானையினைப் போன்ற தேகமும் மானிட உருவமும் உள்ள ஒருவர் அக்குகைக்குள் இருக்கின்றார். குகைக்கருகான இடமெல்லாம் செந்நெல், முத்துக் கோதுகள் பிரமாண்டமாய்க் குவிந்திருக்கின்றன என்றான். அதனைக் கேட்ட அவள் அவ்விடம் மந்திரிகளை அனுப்பிப் பார்த்தபோது எதுவித தடயமும் தெரியவில்லை என்ற செய்தியினை அரசிக்குத் தெரிவிக்கின்றான். அதனால் கோபங்கொண்ட அரசி, எயினனைக் காலில் தூக்கிட்டு வைக்கும்படி கட்டளையிடுகின்றாள். (மட்டக்களப்பு பூர்வசரித்திரம் : 2005)*

**இராமர் கனவில் வருதல் - 2**

*இவ்வாறாறு அவன் தூக்கிடப்பட்ட இரவு, இராமர் பிரசன்னராகி எயின் கூறியது உண்மை என்றும், நூற்றிருபது வருஷம் ஆயுள் என்றும் (ஆடகசவுந்தரிக்கு), நூற்றுப் பதினேழாவது வருஷத்தில் ஒரு புத்திரனைப் பெறுவாய் என்றும், முற்காலத்தில் இராவணேஸ்வரன் நிகும்பலயாகம் செய்ய அதிலுண்டாகிய பூதங்கள்தான் எயின் கூறிய குகைக்குள் இருக்கின்ற தென்றும், நீ அந்த இடத்திற்குச் சென்று உம்முடைய இராம மந்திரத்தைத் தியானிக்க அப்பூதம் நூற்றெட்டும் உம்முடைய பாதத்தில் நமஸ்காரம் செய்து, உம் அடிமையாய் வாழும் என்று தரிசனத்திற் கூறி மறைந்தார். அதன்படி அங்கு சென்று இராம மந்திரத்தினைச் தியானிக்கப் பூதங்கள் காலில் வீழ்ந்தன. பூதங்களைக் கண்டு அதிர்சியுற்ற அரசி, அப்பூதங்களுக்கு ஒரு நாளைக்கு இருபது கலம் அரிசிக்கஞ்சி காச்சிக் கொடுக்கும்படியும், அவர்கள் இருந்த இடத்தை நகராக்கி இராட்சதர் கல் என்று இடப்பெயர் சூட்டி, மக்களைக் குடியேற்றும்படி தாசகனிடம் கூறி உன்னரசுகிரி சென்றாள். (மட்டக்களப்பு பூர்வசரித்திரம்: 2005)*

**இராமர் கனவில் வருதல் - 3**

*ஓர் இரவு தூங்கும்போது இராமமூர்த்தி கனவில் தோன்றி, ஆடகசவுந்தரியே நீ திரோதாயுக முடிவில் இலங்கையினை அரசுபுரிந்த இராவணனுக்கு மகளாகப் பிறந்தாய். சோதிடக் குறிப்பின் படி இந்தப்பிள்ளை உம்முடைய இராச்சியத்திற்கு ஆகாது எனக் கூறியபோது, உன்னைப் பேழையில் அடைத்து ஆழியில் விட, சனகன் யாகம் செய்யும் இடம் நீர் போக, அவன் உன்னை எடுத்து வளர்த்து இராமனுக்கு திருமணம் செய்து வைத்தான். பின்னர் ஸ்ரீ இராமர் பதிநான்கு வருடம் காடுசெல்ல வேண்டிவந்தது. அங்கு திருச்சிராவில் உள்ள சூர்ப்பநகை உன்னைச் சந்தித்து வாதம் செய்து இலக்குவணனால் மூக்கரிபடுகின்றாள். அதனை இராவணனிடம் கூற, உன்னை மாயமாய் இலங்கையில் சிறை வைக்கின்றான். பின்னர், இராமர் அவனைக் கொன்று அவனுடைய தம்பி விபுஷனனுக்கு இலங்கையினைப் பட்டங்கட்டி அயோத்தி மார்க்கமாகப் போக வேண்டி வந்தது. அதற்காக அனுமனை ஏவி, காசி அவிமுத்தி நீரை எடுத்து, ஒரு வாவியில் கலந்து இருவரும் ஸ்நானம் செய்து பாவத்தை நீக்கி அயோத்திற்குப் போய் வாழும் காலம், குசன் பிறந்து வான்மீகரால் உபதேசம் அளிப்பித்துப் பின்னர் பரமபதம் அடைந்தாய், அதுபோல் இப்பிறப்பும் எடுத்தாய் என்று அவளுடைய முன் வரலாற்றினைக் கூறி, இப்போது*

*காசி அவிமுத்தி நீர் கலந்த நதி உம்முடைய ஆச்சிரமத்திலிருக்கின்றது. அந்த நதியை ஆராய்ந்து அறிந்து, பசுஞ்சேறாய் ,ருக்கும் குஷ்டரோகிகள் ஸ்நானம் செய்தால் உடனே மாறும் என்று மறைந்தார். அவளும் அந்த நதி பற்றிய தேடலைத் தொடர்ந்து ஒரு நதியைக் கண்டுபிடித்து அதற்கு மாமங்கைநதி என்று நாமம் சாற்றி, ஸ்நானம் செய்து, தீர்த்தமெடுத்து திருக்கேயில் சமுத்திரத்தில் கலந்து ஆண்டுதோறும ஆடித்திங்கள் அமாவாசை அன்று ஸ்நானம் செய்து கொண்டு வந்தாள் என்று மட்டக்களப்பு மான்மியம் மற்றும் மட்டக்களப்பு பூர்வசரித்திரம் குறிப்பிடும் குறிப்புக்களில் இருந்து தெரியவருகின்றது.*

**மகாசேனன்**

*மேல் வங்கர்குலத்து மகாராசசேனன் என்பவனே மகாசேனன் என்றும், இவன் கலிபிறந்து மூவாயிரத்து முன்னூற்று நாற்பதாம் வருடம் (கி.பி.248) முடிசூடவேண்டும் என்று, கலிங்க தேசம் சென்று தத்தீசனுடைய சகோதரன் சங்கமிகுந்தவைக் கண்டு, தன்னைப் பற்றி அறிமுகம் செய்து, அவனது வேண்டுகோளுக்கினங்க இலங்கை வந்து திருக்கோணேஸ்வரத்தினை புனருத்தாரணம் செய்து, ஆடகசவுந்தரியைக் கண்டு, அவளது கட்டளைப்படி பூதங்களின் துணையுடன் கந்தளாய்க்குளம், மின்னேரிக்குளம் போன்ற பல குளங்களை அமைத்து, பின்னர் அவளைத் திருமணம் செய்து, சிங்ககுமாரன் எனும் மகவைப்பெற்று, அவனை கி.பி.268ஆம் ஆண்டு முடிசூடச் செய்து, கி.பி.284 இல் பரமபதமடைகின்றான். இம்மன்னன் பற்றிய வரலாறு பலவாறாக எடுத்துக்காட்டப்பட்டாலும் ஆடகசவுந்தரியைத் திருமணம் செய்தான் என்பதில் மாறுபாடில்லை போலும். (மகாசேனன் வரலாறு பற்றிய முரனையும் தெளிவையும் இன்னொரு கட்டுரையில் எதிர்பார்க்கலாம்) இலங்கை வரலாற்றுப்படி அனுராதபுர இராச்சியத்தின் மன்னனாக கி.பி. 277 - 304 வரை ஆட்சி செய்துள்ளான். எனவே, கல்வெட்டுச் செய்திகளுக்கும் இலங்கை வராற்று ஆவணங்களுக்கு மிடையே சொற்ப வேறுபாடுதான் காணப்படுகின்றன.*

**ஆய்வு முடிவு**

**இராம - இராவண யுத்தம்**

*காசி அவிமுத்தி நீர்கலந்த தீர்த்தம் மாமாங்க நதியில் கலக்கப்பட்டு அந்த தீர்த்தம் புனித் தன்மை பெற்றிருக்கின்றது என்றால் இராம - இராவண இறுதி யுத்தம் இலங்கையில் இடம் பெற்றிருக்கின்றமை தெரியவருகின்றது. மாமாங்க நதி பக்கமாக உள்ளதால் மட்டக்களப்பு நாட்டிலும் இந்த யுத்தம் இடம்பெற்றிருக்கலாம். தாந்தாமலை அடச்சகல் என்ற இடத்தில் இலக்குவணனுக்கும் இந்திரயித்துவுக்கும் யுத்தம் இடம்பெற்றதாக ஐதீக் கதைகள் மூலம் அறிகின்றோம். அதனால்தான் அடச்சகல் என்ற பெயரும் எற்பட்டது என்ற ஐதீகமும் உண்டு. அத்தோடு மட்டக்களப்பு நாடு கரையோரமாக இருப்பதனால் இந்த யுத்தம் ஆரம்பத்தில் கரையோரத்தை அண்டிய பிரதேசங்களிலே ஏற்பட்டது என்பர்.*

**மாமாங்கப் பிள்ளையார் ஆலய வரலாறு**

*இராமாயணத்தில் இராமன், இலங்கை அரசன் இராவணனைப் போரில் வென்று, சீதையை சிறைமீட்டு அயோத்தி திரும்பும் வழியில் தற்போது இத்தலம் அமைந்துள்ள இடத்தில் ஒய்வெடுத்ததாகவும், சிவபூசை செய்து வழிபட சிவலிங்கம் ஒன்றை எடுத்துவர அனுமனை அனுப்பியதாகவும், அனுமன் சிவலிங்கம் கொண்டுவர தாமதமானதால் அங்கிருந்த மண்ணினால் இலிங்கம் செய்து சிவபூசை செய்ததாகவும், ,ராமர் தனது கோதண்டத்தை நிலத்தில் ஊன்றி பூசைக்கு தேவையான தீர்த்தத்தினை பெற்றதாகவும், தாமதமாக வந்த அனுமனால்*

*எடுத்து வரப்பட்ட இலிங்கத்தினை கோதண்டத்தை ஊன்றிய இடத்தில் புதைத்ததாகவும், இராமபிரானால் செய்யப்பட்ட இலிங்கமே ஆலயத்தில் மூல மூர்த்தியாகவும் உள்ளன என்பர். இங்கு அனுமனால் கொண்டுவரப்பட்ட இலிங்கம் புதைக்கப்பட்ட இடமே அங்கு அமைந்துள்ள தீர்த்தமாகும். இவ்வாலயத்தின் தீர்த்தக்குளம் இராமபிரானால் தோண்டப்பட்டதாலும், அனுமன் கொண்டு வந்த இலிங்கம் அங்கே புதைக்கப்பட்டதாலும், நோய்கள் பல தீர்க்கும் அற்புத ச க்திகளையுடையது இத்தீர்த்தம் என்பர். இக்குளத்தில் காணப்படும் சந்தனச் சேறும் பல அரிய வைத்திய குணங்களுடையதெனவும், பல்வேறுபட்ட சரும நோய்களுக்குரிய நிவாரணி எனவும் நம்பப்படுகிறது. மாமாங்கப் பிள்ளையார் வரலாறு பண்டைக்கால வாழ்வுடனும் வழிபாட்டுடனும் தொடர்புடையது. மாமாங்கக் கோயில் ஆரம்பத்தில் லிங்க வணக்கம் இடம் பெற்றதென்றும். பின்னர் பிள்ளையாரையும் இணைத்து வழிபடுவதாகவும் அமைந்திருக்கின்றது. கர்ப்பக்கிரகத்தில் சிவலிங்கம் உள்ள சிவலிங்கம் விநாயகர் அங்கியுடன் காட்சி தருவதால், மாமாங்கப்பிள்ளையார்என்றேவணங்கப்படுகின்றார். இன்று, இத்தலம்மாமாங்கப்பிள்ளையார் என்ற பெயருடனும் அமிர்தகழித் தீர்த்தம் என்ற தன்மையுடனும் உயர்ந்து நிற்கின்றது. இந்த தீர்த்தம் ஆடி அமாவாசையில் பிதிர்கடன் தீர்க்கும் தீர்த்தமாக இடம்பெறுகின்றது. தீர்த்தம் ஆடினால், குழந்தைப் பிள்ளைகளின் தலையில் உள்ள இரட்டைச் சுழி ஒன்றைச் சுழியாகும் என்ற நம்பிக்கை இன்றும் உண்டு. இவ்வாறாகப் பல்வேறு நோய்களைத் தீர்க்கும் தீர்த்தமாக அமிர்தகழித் தீர்த்தம் அடியவர் வாழ்வில் உயர்ந்து நிற்கின்றது.*

**மகாசேனன்**

*குளக்கோட்டன் எனும் பெயர் மகாசேனன் என்று மட்டக்களப்பு பூர்வசரித்திரம், மட்டக் களப்பு மான்மியத்தில் வருவதாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால், கோணேசர்கல்வெட்டில் குளக்கோட்டன் என்றே வருகின்றது. ஆகவே, ஆய்வாளர்களின் கருத்துப்படி மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப் பூர்வசரித்திரத்தில் இடம்பெறும் மகாசேனன் வேறு குளக்கோட்டன் வேறு என்பதாகும். இந்த ஆதாரங்களில் இடம்பெறும் மகாசேனனுடைய காலம் கி.பி.248 ஆம் அண்டுக்குப் பின்னுள்ள காலமாகும். இலங்கை வரலாற்றுப்படி மகாசேனன் அனுராதபுர ஆட்சி செய்த காலம் கி.பி.276 - 304 என்பதாகும். எனவே, ஆட்சி செய்த காலங்கள், செ ாற்ப வேறுபாடுகளுடனே காணப்படுகின்றன. இம்மன்னன் திருக்கோணேஸ்வரம், திருக்கோயில் போன்ற ஆலயத்தைப் புதுப்பித்து, வைதூலிய வைசத்தைப் பின்பற்றியுள்ளான். (மட்டக் களப்பு பூர்வசரித்திரம்: 2005) இவனது காலத்தில் மகாவிகாரைகள் அழிக்கப்பட்டு, அபயகிரிவிகாரைகள் வளம்படுத்தப்பட்டு, சைவ ஆலயங்கள் கட்டப்பட்டமை பற்றி மகாவம்வம் குறிப்பிடுகின்றது. பாலநகைக் கல்வெட்டு, மகாசேனன் மின்னேரிக் குளத்தினைக் கட்டினான் என அடையாளப்படுத்துகின்றது.*

**மகாவம்சம்**

*மகாவம்சம், அத்தியாயம் 37 இன்படி, ஜேதத்தீசனுடைய மரணத்திற்குப் பின்னர், அவன் தம்பியாகிய மகாசேனன் 27 வருடம் ஆட்சி செய்தான். இப்பெயர் மட்டக்களப்பு பூர்வசரித்திரத்தில் தத்தீசன் என வருகின்றது. தத்தீசன்; அனுராதபுரத்தினை ஆட்சி செய்துள்ளான். சங்கமித்தர தேரரின் ஆலோசனைப்படி மகாசேனன் மகாவிகாரைக்கு எதிராகப் பல பாதகமான செயற்பாடுகளைச் செய்து அபயகிரிவிகாரையினை வளம்படுத்தினான். பின்னர் எதிர்ப்புக் கிழம்பவே மகாவி காரத்தினையும் சிறப்புப்படுத்தினான். பின்னர், கலந்தன் என்ற பிராமணனுடைய கிராமத்தில் ஒரு விகாரத்தையும் காலவேல யக்ஷனுடைய இடத்தில் ஒரு ஸ்தூபத்தையும் அமைத்து, தீவில் பல பாழடைந்த ஆலயங்களைப் புதுப்பித்தான். இவன் பதினாறு குளங்களைக் கட்டி, பெரும்*

*புகழும் பெரும் பாவமும் தேடிக்கொண்டான் என்கிறது மகாவம்சம். எனவே, மகாவம்சம் எழுதப்பட்டது கி.பி.6 ஆம் நூற்றாண்டாகும். இந்தக் காலத்திற்கு முன்னுள்ள வரலாறே மகாசேனன் வரலாறாகும். எனவே, மகாவம்சத்தில் மகாசேனன் பற்றிய வரலாற்றுச் செய்தி வருவதோடு, ஆடகசவுந்தரி பற்றிய வரலாறு மறைக்கப்பட்டிருக்கின்றமை தெரியவருகின்றது. பதிலாக அனுலா (கி.மு.47 - கி.மு.42) என்கின்ற பெண்ணரசு பற்றிய செய்தி அதில் இடம் பெறுகின்றது.*

**குளக்கோட்டன்**

*ஆடகசவுந்தரி, குளக்கோட்டன் என்பவன் திருகோணமலையில் கோயில் கட்டுவதை அறிந்து அவனை அழித்து வருமாறு தனது படைகளை அனுப்பினாள், அவன் அவர்களை பின்னர் முறியடித்து ஆடகசவுந்தரியினைத் திருமணம் செய்திருக்னறான் என்ற தகவல் கோணேசர் கல்வெட்டில் உண்டு. இதே தன்மையில் இக்குறிப்பு மட்டக்களப்பு பூர்வசரித்திரத்திலும் மட்டக்களப்பு மான்மியத்திலும் நிற்கின்றது. இங்கு குளக்கோட்டனுக்குப் பதிலாக மகாசேனன் என்ற பெயர் வருகின்றது. இந்த தகவல்களின்படி மகாசேனனும் குளக்கோட்டனும் ஒருவரே என்பது தெரியவருகின்றது. இந்த ஆதாரங்களின்படி, மகாசேனன் மற்றும் குளக்கோட்டன் எனற பெயருடையோர் திருக்கோணேஸ்வரத்தினைக் கட்டவில்லை என்பது தெளிவாகின்ற தோடு, மாறாகப் புனரமைப்புச் செய்துள்ளமையும் தெரியவருகின்றது.*

**சுதந்திர அரசு**

*அனுராதபுரம் இலங்கையின் தலைநகரமாக காலத்தில், பாணமை, உன்னரசுகிரி போன்ற இடங்களில் சுதந்திர அரசு நிலவி இருக்கின்றது. அவ்வாறாயின் அனுராதபுர இராட்சியத்திற்கும் மட்டக்களப்பு நாட்டில் நிலவிய சுதந்திர அரசுகளுக்குமிடேயே இருந்த உறவும் தொடர்பும் தெரியவருகின்றது. புவனேயகஜவாகு இலங்கைக்கு வந்து உன்னரசுகிரியினை ஆட்சிசெய்து பின்னர் அனுராதபுரத்தினையும் ஆண்டுள்ளான் போலும். மகாசேனன் ஆட்சிக்கு முன்னர் அவனுடைய சகோதரன்; ஜேததீசன் ஆட்சி செய்தமை பற்றி மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அந்தப் பெயரை மட்டக்களப்பு பூர்வசரித்திரம் தத்தீசன் என்கின்றது. தத்தீசனுடைய ஆட்சியின் பின்னர் மகாசேனன் அனுராதபுரத்தினை ஆட்சி செய்திருக்கின்றான். எனவே, மகாசேனன் தத்தீசனுக்குப் பின்னர் உன்னரசுகிரியி னையும் அனுராதபுரத்தினையும் ஆட்சி செய்துள்ளமை தெரியவருகின்றது. அதுபோல் மேகவண்ணடைய ஆட்சியில் அவனுடைய உறவினன் குணசி ங்கன் பாணமையினை ஆட்சி செய்கின்றான். இவ்வாறாக ஒரு உறவு மேன்மை பெற்றதனால் மட்டக்களப்பு நாடு சுதந்திர அரசாக நிலவியது போல் தெரிகின்றது, இந்தத் தொடர்பும் ஆட்சியும் கண்டி ஆங்கிலேயரால் கைப்பற்றுப்படும்வரை (கி.பி.1815) நீடித்தது.*

**கண்ணகி வழிபாடு**

*சேரமன்னன் கஜவாகு கண்ணகி வழிபாட்டினை இலங்கைக்குக் கொண்டு வந்தமை பற்றிய தகவல் சிலப்பதிகாரத்திலும் அனுராதபுரத்தினை முதலாம் கஜவாகு மன்னன், கி.பி.113 தொடக்கம் 135 வரை ஆட்சி செய்தமை பற்றிய தகவல் இலங்கை வரலாற்றிலும் உண்டு. ஆனால், அம்மன்னன் அல்லது அவனது ஆட்சி பற்றிய குறிப்புக்கள் மகாவம்சத்தில்கூட தெளிவாகக் கிடைக்கவில்லை. எனினும், 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இராசாவளியில் கஜவாகு மன்னன் இவ்வழிபாட்டினைக் இலங்கைக்குக் கொண்டுவந்தமை பற்றிய குறிப்புண்டு. மேலும், திருக்கோணாசல வைபவம், கஜவாகு மன்னன் ஆரம்பத்தில் சைவனாக இருந்து, பின்னர் பௌத்த மதத்திற்கு மதம்மாறியமை பற்றிக் குறிப்பிடுகின்றது. இவ்வாறான பின்னணியில்*

*அவதானிக்கையில், புவநேயகஜவாகு மற்றும் மனுநேயகஜவாகு (கி.பி.48) ஆட்சியின் பின்னரே, முதலாம் கஜவாகு மன்னனின் ஆட்சி இடம்பெற்றிருக்கின்றது. இங்கு புவநேயகஜவாகு இவனுடைய மகன் மனுநேயகஜவாகு என்போர்தான் முறையே முதலாம் கஜவாகு, என்றும் இரண்டாம் கஜவாகு என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். ஏனெனில், கஜவாகு சேரமன்னன் என்ற குறிப்பு பல இடங்களில் வருவது மட்டுமல்ல, இம்மன்னர்கள் இந்தியதேசத்தில் இருந்து வந்தமை பற்றிய குறிப்புக்கள் பாலநகைக் கல்வெட்டில் காட்டப்படுகின்றது. அத்தோடு, தமிழ் மன்னர் என்ற வகையிலே சேரன் செங்குட்டுவன் கஜவாகு மன்னனை கண்ணகிக்கு விழா எடுத்த நிகழ்வுக்கு உரிமையோடு அழைத்திருப்பதற்கான வாய்ப்பு அதிகமாகின்றது. ஆனால் சம்பைக் கல்வெட்டு, அசோகன் கல்வெட்டு, புகளூர் கல்வெட்டு, பதித்துப்பத்து, தலைவடிவப் பெருவழுதி நாணயங்கள் என்பன சேரன் செங்குட்டுவன் காலத்தினை கி.மு.3 நூற்றாண்டு என்று அடையாளப்படுத்தி, 2ஆம் நூற்றாண்டுக் கஜவாகு மன்னனுக்கும் சிலப்பதிகாரத்திற்கும் தொடர்பு இல்லை என்று காட்டுகின்றது. அவ்வாறாயின் கஜவாகு மன்னன் காலம் வேறுபடும் அல்லது, சிலப்பதிகாரத்தில் கஜவாகு மன்னனைச் சுட்டிவரும் பாடல் இடைச்செருகல் என்ற தன்மையும் மேலெழும். எவ்வாறாயினும் சேரன் செங்குட்டுவன் காலத்தில் அனுராதபுரத்தினைத் தலைநகரமாகக் கொண்டு, பண்டுகாபயன் (கி.மு.437 - 367), பண்டுகாபயன் மைந்தன் மூத்தசிவன் (கி.மு.367 - 307), மூத்தசிவன் மைந்தர்களான உதியன் (கி.மு.267 - 257), மகாசிவன் (கி.மு.257 - 247) ஆகியோர்களுடைய ஆட்சி இடம் பெற்றிருப்பதனால், கண்ணகிக்கு விழாவெடுத்த நிகழ்வில் இவர்களில் ஒருவர் அந்த நிகழ்வில் கலந்திருக்க வாய்ப்புண்டு. இம்மன்னர்களின் பெயர் கஜவாகு என்ற சிறப்புடன் அழைக்கப்பட்டிருக்கலாம், அல்லது இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தினை இயற்றும் காலத்தில், இலங்கையினை ஆட்சி செய்த மன்னன் கஜவாகுவாக இருக்கலாம் என்பதுதான் இந்த ஆய்வில் புலனாகின்றது. தமிழ் மக்களிடையே குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் கண்ணகிவழிபாடு பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதுபோல் சிங்கள மக்களிடையே பத்தினித் தெய்யோ என்ற நிலையில் இவ்வழிபாடு மேலெழுகின்றது.*

**தொகுப்புரை**

*வரலாற்று அடிப்படையில் நோக்குமிடத்து, ஆடகசவுந்தரி உன்னரசுகிரியினை இராச தானியாகக்கொண்டு ஆட்சி செய்திருப்பது பல வரலாற்றுத் தடயங்கள் அடிப்படையில் புலனாகின்றன. எனினும், மன்னர்கள் ஆட்சி செய்த காலங்களுக்கிடையே சொற்ப வேறுபாடு காணப்படவே செய்கின்றன. இலங்கை வரலாறு கூறும் மகாவம்சம் கி.பி.6ஆம் நூற்றாண்டில் மகாநாம தேரர் என்பவரால் தொகுக்கப்பட்டது. அவ்வாறு இருந்தும் அதனை வரலாற்று ஆவணமாகப் ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வாறாயின் தமிழரின் தொன்மங்களையும் அடையாளங்களையும் கூறும் கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், வாய்மொழித் தகவல்கள், ஐதீகக் கதைகள் போன்றவற்றில் வரும் தகவல்களும் உண்மையாகவே இருக்கவேண்டும் என்ற ஆய்வாளர்களுடைய வாதங்களையும் ஏற்கவேண்டியுள்ளது. எவ்வாறாயினும், ஆய்வின் அணுகுத் தன்மையினை மகாவம்சத்துடன் நோக்கி ஆராயுமிடத்து வரலாற்றுத் தன்மையில் புலனாகும் இடங்கள், பெயர்கள், சம்பவங்கள் போன்றன ஒன்றுபட்டும் வேறுபட்டும் நிற்பதோடு மறைக்கப்பட்டும் உள்ளன. எனினும், ஆட்சியாளர்களின் பெயரில் முன்னொட்டு, பின்னொட்டு, எழுத்துக்களில் சில மாறுதல்கள் போன்றன காணப்படவே செய்கின்றன. மட்டக்களப்பில் உன்னரசுகிரி ஆட்சி இடம்பெற்ற காலத்தில் அனுராதபுர ஆட்சி பற்றியும் குறிப்பிடப்படுகின்றது. எனவே, வரலாற்றுத் தகவல்களின்படி உன்னரசுகிரியினை ஆட்சி செய்த மன்னர்கள் அனுராதபுரத்தினையும் ஆண்டுள்ளமை புலனாகின்றது. இருந்தபோதும்,*

*தமிழ்நாட்டில் கிடைக்கப்பெறுகின்ற கல்வெட்டுக்கள், இலக்கியங்கள், நாணயங்கள் போன்ற ஆதாரங்களின் அடிபடையினையும் ஒப்பிட்டு ஆராயுமிடத்து வரலாற்றின் மெய்மைகள் மேலும் புலப்படும். எனவே, மட்டக்களப்புப் பூர்வசரித்திரம், மட்டக்களப்பு மான்மியம் என்பனவற்றில் வரும் கல்வெட்டுகள், அதனோடு இணைந்தவகையில் வரும் சம்பவங்கள் போன்றவை பொருத்தமான வகையில் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படாமலே நழுவிச் செல்கின்றன. அவற்றினை ஆராயும் போது வரலாறில் காணப்படும் பல்வேறு சுவடுகள்மறுவாசிப்புக்கு வரும்.*

**பயன்பட்ட நூல்கள்**


1. *அகிலேசபிள்ளை. திருக்கோணாசல வைபவம், தத்துவஞானத் தவச்சாலைப் பிரசுரம், 2000.*
2. *கங்கேஸ்வரி கந்தையா. அரசன் ஆணையும் ஆடகசவுந்தரியும். கலைவாணி புத்தக நிலையம், 1965.*
3. *கந்தையா, வி. சி. மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெள்யீட்டு மன்றம், 1964.*
4. *கமலநாதன், சா. மட்டக்களப்பு பூர்வசரித்திரம். குமரன் புத்தக இல்லம், 2005.*
5. *குணராசா, செ. ஈழத்தவர் வரலாறு. பூபாலசிங்கம் பதிப்பகம், 1996.*
6. *குணராசா. மகாவம்சம். கமலம் பதிப்பகம், 2003.*
7. *சங்கரன், எஸ். மகாவம்சம். மல்லிகை வெளியீடு, 1962.*
8. *சிற்றம்பலம், சி, க. ஈழத்தமிழர் தொன்மை, ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம், 2001.*
9. *தங்கேஸ்வரி, க. குளக்கோட்டன் தரிசனம். அன்பு வெளியீடு, 1993.*
10. *நடராசா, எவ். எச், சி. மட்டக்களப்பு மான்மியம். மட்டக்களப்பு கலாசாரப்பேரவை, 1998.*
11. *ஜகதீச அய்யர், பி. வி. புராதன இந்தியா. 1918.*
12. *கணியன் பாலன். சேரன் செங்குட்டுவனும் இலங்கைக் கஜவாகும் - பகுதி 1.*


**References**


1. Akilespillai. *Thirukonamalai Vaibhavam*. Thathuvagnana Thavasalai Publication, 2000.
2. Kangeswari Kandaiah. *The King's Order and Adagasoundari*. Kalaivani Book Store, 1965.
3. Kandaiah, V. C. *Batticaloa Tamil Region*. Eelakesari Ponnaiah Memorial Publication, 1964.
4. Kamalanathan, S. *Ancient History of Batticaloa*. Kumaran Book House, 2005.
5. Gunarasa, S. *History of Eelam People*. Boopalasingam Publication, 1996.
6. Gunarasa. *Mahavamsa*. Kamalam Publication, 2003.
7. Sankaran, S. *Mahavamsa*. Mallikai Publication, 1962.
8. Sitrambalam, C. K. *Antiquity of Eelam Tamils*. Refugee Rehabilitation Association, 2001.
9. Thangeswari, K. *Kulakkottan Dharisanam*. Anbu Publications, 1993.
10. Nadarasa, F. H. C. *Batticaloa Manmiyam*. Batticaloa Cultural Council, 1998.
11. Jagadeesha Iyer, P. V. *Ancient India*. 1918.
12. Kaniyan Balan. *Cheran Senguttuvan and Sri Lanka's Kajavahu - Part 1*.